
# 35 ஏக்கரில் ஆண்டுக்கு ரூ.17 இலட்சம்

## 25.7.12



ஒரே ஒரு பயிலை மட்டும் சாகுபடி செய்யாமல், பலவிதமான பயிர்களை கலந்து சாகுபடி செய்பவர்களும், விவசாயத்தோடுநால்நடைகளையும் வளர்த்து வருபவர்களும், பெரும்பாலும் நஷ்டத்தை சந்திப்பதில்லை. இதைத்தான் சரியாகக் கடைபிடித்துவெற்றிகரமாக விவசயாம் செய்பவர்கள் பலர் உண்டு என்பதற்கு உதாரணமாக நிற்கிறார்... திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த இனியவன். தென்னை, வாழை, கரும்பு என பசுமையாக, கலந்து கட்டி இருக்கும் தன்னுடைய தோட்டத்தில், பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தார் இனியவன். வேலையாட்கள் கிடைக்காமல், முப்பது வருடத்திற்கு முன்பே, 21 ஏக்கரில்தென்னையை நட்டுவட்டார் இவருடைய தந்தை. டி-பார்ம் முடித்துவிட்டு, இவருடைய தந்தையின் ரைஸ் மில்லில் தீவிரமாக இருந்திருக்கிறார்.கூடவே விவசாயமும். ஆரம்பத்தில் இரசாயன உரம், பூச்சிக் கொல்லி என்று தான் பயன்படுத்தியிருக்கிறார். செலவுதான் அதிகமாக இருந்ததே தவிர பெரிதாக வருமானம் வரவில்லை என்கிறார். நான்கு வருடத்திற்கு முன்னதாக பசுமை விகடன் அறிமுகமான பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இயற்கை விவசாயத்திற்கு மாற ஆரம்பித்ததாக கூறுகிறார்.

ஆரம்பத்திலிருந்தே கறவை மாடுகளை வைத்திருக்கிறார். பசுமை விகடன் மூலமாக ஜீரோ பட்ஜெட் விவசாய முறையை தெரிந்து கொண்ட பிறகு, நம்ம நாட்டு இனமான காங்கேயம் மாடுகளை வண்டியில் பூட்டி தேங்காய் ஏற்றுவது, நெல்லை ஏற்றுவது மாதிரியான வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். மாடுகள் மூலமாக கிடைக்கும் கழிவுகளை, வயலுக்குத் தேவையான உரம் உள்ளிட்ட .டுபொருட்கள் தயாரிக்கப் பயன்படுத்துகிறார். ஏற்கனவே உள்ள 21 ஏக்கர் தென்னையில், 10 ஏக்கரில் மட்டும் ஊடுபயிராக வாழை இருக்கிறது. இதைத் தவிர, தனியாக 3 ஏக்கரில் வாழை, 2 ஏக்கரில் கரும்பு, 5 ஏக்கரில் மரவள்ளி, 2 ஏக்கரில் தீவனப்பயிர் இருக்கிறது. இரண்டு எக்கரில் மாட்டுக் கொட்டகை, ஆட்டுப் பண்ணை, ரைஸ் மில்

இருக்கிறது. மொத்தம் 35 ஏக்கரி. இதில் 10 ஏக்கரி குத்தகை நிலம். குத்தகை நிலம் என்பதால் சில காரணங்களுக்காக கரும்புக்கும் மரவள்ளிக்கும் இரசாயனம் போட்டுத்தான் விவசாயம் செய்கிறார். மற்றபடி இவர் தோட்டத்தில் முழு இயற்கை விவசாயம் தான் என்கிறார் இனியவன்.

இவருடையது கரிசல் மண் பூமி. 30 அடியிலேயே தணிணீரும் இருக்கிறது. அதனால், எல்லா சாகுபடியும் சாதியமாகிறது. 21 ஏக்கரில் தமாத்தம் 2 அயிரத்து 200 தென்னை மரம் இருக்கிறது. எல்லாமே, 25 வயதிலிருந்து 35 வயதுள்ள மரங்கள். அவைகளை பராமரிப்பது மட்டும்தான் வேலை. ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதத்தில் மழைக்கு முன் ஒவ்வொரு மரத்திலிருந்தும் இரண்டு அடி இடைவெளியில் ஒன்றரை அடி ஆரத்தில், கால் வட்டம் எடுத்து 25 கிலோ எர வைத்துத் தண்ணீர் கட்டுவோம். வேறு பராமரிப்பே கிடையாது. ஒவ்வொரு மரத்திலேயும் வருடத்திற்கு எண்பதிலிருந்து நூறு காய்கள் வரை கிடைக்கின்றன. ஒரு மரத்தை 125 ரூபாய் என்று குத்தகைக்கு விட்டிருக்கிறார்.அதன் மூலமாக 2 ஆயிரத்து 200 மரத்திற்கும் சேர்த்து வருடத்திற்கு 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. அதில் பராமரிப்புச் செலவு 75 ஆயிரம்போக, 2 லட்ச் ரூபாய் லாபம் என்று இனியவன் வாழை சாகுபடி பற்றி சொல்ல ஆரம்பித்தார்.

தென்னைக்கு நடுவில் கற்பூர வள்ளி வாழையை நடவு செய்திருக்கிறார். 13 ஏக்கரில் மொத்தம் வருடத்திற்கு 8 ஆயிரம் தார் கிடைக்கிறது. ஒரு தார், 100 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரைக்கும் விற்கிறது. சராசரியாக 100 ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும்8 லட்ச ரூபாய் கிடைக்கும். இதில் 3 லட்சம் செலவு போக, 5 லட்ச ரூபாய் லாபம். அதன் மூலமாக வருடத்திற்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரைக்கும் வருமானம் கிடைக்கும். இப்பொழுது, 24 கறவை மாடுகள் இருக்கிறது. இதில் எப்பொழுதும்10 மாடுகள் கறவையில் இருந்து கொண்டே இருக்கும். தினமும் சராசரியாக 40 லிட்டர் பால் கிடைக்கிறது. லிட்டர் 22 ரூபாய் என்று பால் மூலமாக தினமும் 880 ரூபாய் கிடைக்கிறது. மாதம் 26 ஆயிரத்து 400 ரூபாய் கிடைக்கிறது. செலவு போக, 16 அயிரம் ரூபாய் லாபம் என்றவரைத் தொடர்ந்து, ஆட்டுப் பண்ணைப் பற்றி சொல்ல ஆரம்பித்தார் இவரது மாமா எழில்மாறன்.

போன வருடம்தான் ஜமுனாபாரி, போயர் கலப்பு, நாட்டு ரக ஆடுகள் என்று மொத்தம் 30 ஆடுகளோட பண்ணை ஆரம்பித்தோம். கொட்டகைஇ தீவனப்புல் உற்பத்தி, ஆடுகள்னு இதுவரைக்கும் 5 லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார். ஒரு வருடத்திற்குள்ளாக 65 ஆடுகளாகப் பெருகியுள்ளது. இதுவரைக்கும் ஆடுகளை விறடபனை செய்யவில்லை. இனிமெல் ஆரம்பிக்க வேண்டும் என்கிறார் இவர்.

30 தாய் ஆடுகள் மூலமாக, வருடத்திற்கு 90 குட்டிகளுக்கு குறையாமல் கிடைக்கும். குட்டிகளைஆறு மாதம் வளர்த்து விற்றால், ஒரு குட்டி 4 ஆயிரம் ரூபாய் வரை விலை போகும். சராசரியாக வருடத்திற்கு 80 குட்டிகளை விற்கிறதாகவைத்துகி கொண்டாலும், வருடத்திற்கு 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். தீவனம், மருந்து, பராமரிப்பு என்று 80

ஆயிரம் ரூபாய் செலவுபோக, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக கூறுகிறார் எழில்மாறன். நிறைவாகப் பேசிய இனியவன், சண்டைக் கோழியில் 40, 3 சேவலும் இருக்கிறது. இதன் மூலமாக வருடத்திற்கு 1600 முட்டைகள் கிடைக்கும். இந்த முட்டைக்கு மவுசு அதிகம் என்பதால் ஒரு முட்டைக 20 ரூபாய் என்று விலைபோகும். மீதியை இன்க்பேட்டரில் வைத்துபொரிக்க வைப்பதால் எப்படியும் 500 குஞ்சுகள் கிடைக்கும்.இதை ஒரு ஜோடி 1000 ரூபாய் என்று விற்கிறோம்.முட்டை, குஞ்சு மூலமாக மொத்தம் வருடத்திற்கு 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. பராமரிப்பு தீவனச் செலவு போக எப்படியும் 2 லட்சத்து 40 அயிரம் ரூபாய் லாபமாக கிடைக்கிறது.

2 ஏக்கரில் ஒரு வருடத்திற்கு கிடைக்கிற 100 டன் கரும்பு மூலமாக 2 லட்ச ரூபாய் கிடைக்கும். அதில் 80 ஆயிரம் ரூபாய் செலவு போக 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் லாபம். 5 ஏக்கரில் வருடத்திற்கு 50 டன் அளவுக்கு மரவள்ளி கிடைக்கிறது. டன் 3 ஆயிரம் ரூபாய் என்று விற்பதால் மரவள்ளி மூலமாக வருடத்திற்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வருமானம். செலவு போக 1 லட்ச ரூபாய் லாபம். எல்லாம் சேர்த்து 35 ஏக்கரில், பத்து ஏக்கருக்கான குத்தகைத் தொகை, செலவுகள் போக, வருடத்திற்கு 17 லட்ச ரூபாய்க்கு குறையாமல் லாபம் விடைக்கிறது என்கிறார்

**தொடர்புக்கு**
**இனியவன்**
**செல்போன் : 94872-63606.**
**ஏழில்மாறன்**
**செல்போன் : 89034 – 42489**